பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 11 புதன்கிழமை 23.02.2022 கதிர் 110

**இது ரகசியம் அல்ல!**

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணிக் கட்சி 2021 இல் பதிவுசெய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியாகத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட விடயம் தொடர்பில் சில சர்ச்சைகள் உள்ளன, அந்தப் பதிவு முறையில் ☞2

# நாட்டில் இன்று சுழற்சி முறையில் நான்கரை மணிநேரம் மின் தடை!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

நாட்டில் இன்று சுழற்சி முறையில் நான்கு மணித்தியாலங்களுக்கு அதிக காலம் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்குப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது என அதன் தலைவர் ஜனக்க ரத்நாக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, இன்று ஏ, பி மற்றும் சி ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு 4 மணித்தியாலமும் 40 நிமிடமும் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

ஏனைய வலயங்களுக்குள் உள்ளடங்கும் பகுதிகளுக்கு 4 மணித்தியாலமும் 30 நிமிடமும் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ☞10

# பிச்சைக்கார நிலைமையில் இலங்கை; பொறுப்புக் கூறுமா ராஜபக்ஷ குடும்பம்?



## சம்பிக்க எம்.பி. கேள்விக்கணை

கொழும்பு, பெப்ரவரி 23

இலங்கை தற்போது அடைந்துள்ள பிச்சைக்கார நிலைமை சம்பந்தமாக ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் ஆகிய ராஜபக்ஷ சகோதரர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். ☞10

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சகல அறிக்கைகளும் நாடாளுமன்றில்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகள் உட்பட அனைத்துத் தொகுதிகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் ☞10

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக

## ஜனாதிபதி செயலகம் முன் நாளை தமிழ் எம்.பிக்கள் பெரும் போராட்டம்

(ந.லோகதயாளன்)

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன்பாக நாளை மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மகாவலி அதிகார சபையின் செயற்பாட்டால் பெரிதும் பாதிக்கப்படும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அவலம் உட்பட ஏனைய மாவட்ட அவலங்களையும் வெளிக்கொண்டு வரும் நோக்கில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாடாளுமன்ற ☞10

## வயோதிபப் பெண் அடித்துக் கொலை!

### நகைகளும் அபகரிப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், சோமசுந்தரம் அவனியூ பகுதியில் வீடொன்றில் வயோதிபப் பெண்ணொருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் இந்தச் சம்பவம் ☞10

## இரு வருடங்களில் நாடு பாரிய அழிவு

ராஜித எம்.பி. சுட்டிக்காட்டு



நாடு கடந்த இரண்டு வருடங்களில் பாரிய அழிவைச் சந்தித்துள்ளது என ஐக்கிய ☞10

## முல்லைத்தீவு நகரில் திருட்டில் ஈடுபட்டவர்கள் யாழில் சிக்கினர்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் யாழ்ப்பாணத்தில் யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் ☞10




## கனகராயன்குளத்தில் பாரவூர்தி மோதி மகள் பரிதாபச் சாவு; தந்தை படுகாயம்!

(ந.லோகதயாளன்)

கனகராயன்குளம் பகுதியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த தந்தை, மகள் மீது பாரவூர்தி மோதியதில் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பஸ்ஸை மறிக்க ஏற்பட்ட வேளை வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பாரவூர்தி கட்டுப்பாட்டை இழந்து குறித்த ☞10

## 11 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 11 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் மார்ச் மாதம் 8ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் – ஊர்காவற்துறை நீதிவான் ☞10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோசடி இடம்பெற்றுள்ளதா என்று சந்தேகம் கிளப்பப்படுகின்றது என்றெல்லாம் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் பிரஸ்தாபித்து இருந்தேன்.

அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் குரல் பதிவு மூலம் ஒரு விளக்கத்தை அனுப்பியிருந்தார். நீதியரசர் விக்னேஸ்வரனின் கட்சிப் பதிவு தொடர்பில் இன்னொரு கட்சியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் என்ன வியாக்கியானம் தர முடியும் என்ற கேள்வி எழுவது நியாயமானதுதான். ஆனால் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – விக்னேஸ்வரனின் கட்சியும் சேர்ந்த கூட்டணியில் சிவாஜிலிங்கமும் இருக்கின்றார். ஆகவே அவர் ஓரணிப் பிரமுகர்.

அடுத்தது – விக்னேஸ்வரனின் கட்சிப் பதிவு தொடர்பாக 2020 இல் தேர்தல் ஆணையத்தில் நடந்த நேர்முகத்தின் போது – அல்லது விசாரணையின் போது – தாமும் அங்கு உடன் இருந்தார் என்கிறார் சிவாஜிலிங்கம். எனவே அந்த சர்ச்சை தொடர்பில் அவரின் விளக்கம் கேட்கப்படக் கூடியதே. (ஆனாலும் இதிலும் ஒரு கேள்வி உண்டு. விக்னேஸ்வரனின் கட்சிப் பதிவு பற்றிய தேர்தல் ஆணைய விசாரணையில் அல்லது நேர்முகத்தில் இன்னொரு கட்சியைச் சேர்ந்த சிவாஜிலிங்கம் எப்படி பங்கு பற்றினார்? எப்படி அக்கட்சி சார்பில் தேர்தல் ஆணையாளர்களுடன் வாதம் செய்தார்? தமது கட்சிப் பிரமுகராக – அல்லது தமது கட்சிக்கான சட்டத்தரணி போல – 'புறொக்ஸி' சமர்ப்பித்து முன்னிலையாகின்றவர் போல – சிவாஜிலிங்கத்தைக் காட்டி, விக்னேஸ்வரன் தம்முடன் அந்த நேர்முகத்துக்கு அவரைக் கூட்டிச் சென்றாரா? அல்லது சிவாஜிலிங்கம் தன்பாட்டில் இடையில் புகுந்தாரா? தெரியவில்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் விக்னேஸ்வரனின் கட்சியின் உறுப்பினராக இருந்தவர் அல்லர் சிவாஜிலிங்கம். அப்படி இருக்கையில் அந்த விசாரணை யில் அல்லது நேர்முகத்தில் அவர் பங்கு பற்றியமை எங்ஙனம் என்பதை நீதியரசர் விக்னேஸ்வரன்தான் தெளிவுபடுத்த வேண்டும்.)

இனி சிவாஜிலிங்கம் குறிப்பிட்ட விடயங்களுக்கு வருவோம்.

**சிவாஜிலிங்கம் கூறியவை**

சிவாஜிலிங்கம் கூறியவற்றில் சாரம் இதுதான்:–

1. 2018 ஒக்டோபரில் வடக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிந்த பின்னரே விக்னேஸ்வரன் ஐயா புதுக் கட்சி தொடங்கினார். 2022 ஒக்டோபரில்தான் அக்கட்சியின் ஆயுள் நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகும்.

2. நான்கு ஆண்டுகள் தொடர்ந்து இயங்கிய கட்சிகள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகப் பதிவு செய்யப்பட முடியும் என்று அதுதொடர்பான 2008ஆம் ஆண்டின் சட்டம் தெளிவாகக் கூறுகின்றது.

3. ஆனால் நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்யாத கட்சியின் விண்ணப்பங்களை அவர்கள் (தேர்தல் ஆணையம்) பொதுவாக ஏற்றுக் கொள்வதில்லை.

4.ஒரு கட்சியின் சார்பில் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டால், அதன்பின் நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லாமல், அக்கட்சி கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று கட்சிகள் பதிவு தொடர்பான அந்தச் சட்டமே கூறுகின்றது

5.ஆனால் 2020இல் தனது கட்சிக்கான பதிவுக்கு விக்னேஸ்வரன் ஐயா விண்ணப்பித்தபோது அவர் எம்.பி. அல்லர். ஆனால் கட்சி பதிவுக்கான விசாரணைக்கு அல்லது நேர்முகத்துக்குச் சென்றபோது அவர் எம்.பி. என்பது அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட போது அதை சமர்ப்பித்தவர் அச்சமயத்தில் எம்.பி. அல்லர் என்பது அங்கு சுட்டப்பட்டது.

6.அதே சமயம் இந்த ஆண்டு தாங்கள் ஒரு தீர்மானம் எடுத்து இருக்கின்றார்கள் என்று தேர்தல் ஆணையாளர்கள் ஒரு விடயத்தை அங்கு தெரிவித்தனர். இவ்வாண்டு கட்சிப் பதிவுக்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு அது நிராகரிக்கப்பட்டால், அடுத்த ஆண்டில் அந்தக் கட்சி, திரும்பவும் பதிவுக்கு விண்ணப்பிக்க முடியாது, அதற்கு அடுத்த ஆண்டுதான் பதிவுக்கு விண்ணப்பிக்க முடியும் என்றார்கள்.

7.அதைக்கேட்டதும் "அப்படியென்றால் (2020 இற்கான) எங்கள் விண்ணப்பத்தை நாங்கள் மீளப் பெறுகின்றோம். நீங்கள் ஆராய்ந்து முடிவு எடுக்க முன்னர் நாங்களே மீளப் பெற்று விடுகிறோம். அப்படிச் செய்தால் நாங்கள் அடுத்த ஆண்டில் புதிதாக விண்ணப்பிக்க முடியும் தானே!" – என்றேன் நான். தேர்தல் ஆணையாளர் நாயகம் அதை மறுத்தார். ஆனால் "நீதிமன்றத்தில் வழக்காளிகளாகிய நாம் எங்கள் வழக்கை வாபஸ் பெறப் போகின்றோம் என்றால் நீதிபதி அதை தடுக்க முடியுமா?" – என்று நான் கேடேன்.

அதனடிப்படையில் எங்கள் விண்ணப்பத்தை – கட்சிப் பதிவுக்காக 2020 இல் நாம் சமர்ப்பித்த மனுவை – விலக்கிக் கொள்கின்றோம் என நீதியரசர் விக்னேஸ்வரன் ஒப்பமிட்டு ஒரு கடிதத்தை சமர்ப்பித்து விட்டு வந்தோம்.

8.அதன் அடிப்படையில்தான் இப் போது இந்தக் கட்சிப் பதிவு இடம்பெற்றிருக்கிறது. அதில் சுத்துமாத்து எதுவும் இல்லை.

– இதுதான் சிவாஜிலிங்கத்தின் விளக்கம்.

இவ்விடயத்தை ஒட்டிய சர்ச்சையை இப்போது கிளப்பியவர் அச்சமயம் தேர்தல் ஆணையாளர்கள் மூன்று பேரில் ஒருவராக இருந்த பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் என்பதால் சிவாஜிலிங்கத்தின் கருத்து குறித்து அவரது விளக்கத்தையும் பெற்றோம். அதை வாசகர்களுக்குத் தர முன்னர் எனது அவதானிப்பு ஒன்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

சுரேஷ்பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம் போன்றோரை அரவணைத்து நீதியரசர் விக்னேஸ்வரன் அமைத்த கூட்டணியின் பெயர் – 'தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி'. அந்தக் கூட்டணியின் பெயரில் தான் அவர் தேர்தலில் போட்டியிட்டார். அந்தக் கூட்டணியின் தலைவர் அவர் என்றுதான் கூறப்பட்டது. அது தொடர்பில் அக்கூட்டணியின் கட்சிகளுக்கிடையில் ஒப்பந்தங்களும் செய்யப்பட்டிருக்கலாம்.

ஆனால் உண்மையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற பெயர் கொண்ட – ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் – அரசியல் கட்சியின் நாமத்தை 'தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி' என்று பெயர் மாற்றம் செய்து, அந்தப் பெயரில்தான் – ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் புதுப் பெயரில் தான் – அவர் தேர்தலில் சிவாஜிலிங்கம், சுரேஷ்பிறேமச்சந்திரன் போன்றோருடன் அணி சேர்ந்து நின்றார். பதிவு செய்யப்பட்ட அந்த அரசியல் கட்சிக்கு உண்மையில் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தான். செயலாளர் சிவசக்தி ஆனந்தன். அப்படித்தான் தேர்தல் ஆணையப் பதிவுகள் கூறுகின்றன. ஆக, யாழ் தேர்தல் மாவட்டத்தில் தேர்தலில் வெற்றி பெற்று ஓர் ஆசனத்தை பெற்ற 'தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணி' என்ற கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்தான். நீதியரசர் விக்னேஸ்வரன் அல்லர். ஆக, பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் எம்.பியாகத்தான் நீதியரசர் விக்னேஸ்வரன் நாடாளுமன்றம் சென்று இருக்கிறார். தமது 'தமிழ் மக்கள் கூட்டணி' என்ற கட்சியின் பெயரிலோ அல்லது சுயேச்சையாவோ அல்ல என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

இனி பேராசிரியர் ரட்ணஜீவன் கூலின் விளக்கத்திற்கு வருவோம்.

**கூலின் விளக்கம்**

சி.வீ. விக்னேஸஸ்வரனின் கட்சிப் பதிவில் சர்ச்சை என்ற விடயத்தை ஒட்டி கடந்த 20 ஆம் திகதிய காலைக்கதிரில் வந்த 'இனி இது இரகசியம் அல்ல' ☞10


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
# 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி II) 2022

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (பகுதி II) பங்குனி மாதம் 3ஆம், 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 6 அமர்வுகளாக நடை பெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவேட்டறையில் (Record Room) வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக் கொள்ளும்போது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் எடுப்பதற்கும், பட்டமளிப்பு விழாவினை காணொளிப் பதிவு செய்வதற்குமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்ட புகைப்படப்பிடிப்பாளரிடம் பட்டமளிப்பு அங்கி பெற்றுக்கொள்ளும் தினமன்றே புகைப்படம் மற்றும் காணொளிப் பிரதிகளுக்காக (DVD) பதிவுகளை மேற்கொள்ளுமாறு பட்டதாரி மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். குறித்த புகைப்படம் மற்றும் காணொளிப் பிரதிகளுக்கான (DVD) கட்டண விபரங்களையும், தமக்காக குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையின் அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விபரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி: www.jfn.ac.lk

| திகதி | நேரம் | பட்டம். |
|---|---|---|
| 25.02.2022 (வெள்ளிக்கிழமை) | மு. ப. 09.00 - மதியம் 12.00<br>பி. ப. 02.00 - பி.ப. 04.00 | * விஞ்ஞானமாணி(பொது)<br>* விவசாய விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>* பொறியியல் விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>* பொறியியல் தொழில்நுட்பமாணி (சிறப்பு)<br>* உயிர்முறைமைகள் தொழில்நுட்பமாணி (சிறப்பு) |
| 26.02.2022 (சனிக்கிழமை) | மு. ப. 09.00 - மதியம் 12.00<br>பி. ப. 02.00 - பி.ப. 04.00 | * சிறப்புக் கலைமாணி<br>* கலைமாணி (பொது)<br>* சிறப்புக் கலைமாணி (மொழிபெயர்ப்புக் கற்கைகள்)<br>* கலைமாணி (சிறப்பு)<br>* நுண்கலைமாணி(நடனம்,சங்கீதம், சித்திரமும் வடிவமைப்பும்) |
| 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை) | மு. ப. 09.00 - மதியம் 12.00<br>பி. ப. 02.00 - பி.ப. 04.00 | * கல்வியில் முதுமாணி<br>* வியாபார நிர்வாகமாணி (சிறப்பு, பொது)<br>* வணிகமாணி (சிறப்பு, பொது) |
| 28.02.2022 (திங்கட்கிழமை) | மு. ப. 09.00 - மதியம் 12.00<br>பி. ப. 02.00 - பி.ப. 04.00 | * கலாநிதி, முதுமெய்யியல்மாணி, முதுகலைமாணி<br>* முதுவிஞ்ஞானமாணி<br>* முது வியாபார நிர்வாகமாணி<br>* வைத்தியமாணி மற்றும் சத்திரசிகிச்சைமாணி<br>* தாதியியலில் விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>* மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>* மருந்தகவியல்மாணி (சிறப்பு)<br>* சட்டமாணி<br>* சித்த வைத்திய சத்திரசிகிச்சைமாணி<br>* நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்<br>* முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் |

**குறிப்பு:**

1) பட்டதாரிமாணவர்கள் கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளையினால் வழங்கப்படும் தொழில் பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

2) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பட்டதாரிகள் தங்களது பட்ட அங்கிகளை 28.02.2022 தொடக்கம் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.(தொலைபேசி இல:024 222 3317) மின்னஞ்சல் முகவரி : **drexam@vau.jfn.ac.lk**

**பதிவாளர்,**
**21.02.2022**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீளமுடியாத நெருக்கடி!

**ஏண்டா இந்த அரசையும் ஜனாதிபதியையும் அதிகாரத்துக்குக் கொண்டு வந்தோம் என்று, இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் தங்களுக்குள் தாங்களே நோகும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.**

**புத்திஜீவிகள் பல நூற்றுக் கணக்கில் ஒன்று சேர்ந்து 'வியத்மக', 'எளிய' என்ற பெயர்களில் அமைப்புக்களை ஏற்படுத்தி, அவை மூலம் பிரசாரங்களை முன்னெடுத்துத்தான் இந்த ஜனாதிபதியை – கோட்டாபய ராஜபக்ஷவை – 69 லட்சம் வாக்குகளுடன், அபரிமிதமான ஆதரவுடன், ஆட்சிக் கட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அதன் விளைவை நாடு இன்று அனுபவிக்கின்றது.**

**புத்திஜீவிகளின் பின்புலத்தில் – அவர்களின் பின்பலத்துடன் – அதிகாரத்துக்கு ஜனாதிபதி வந்திருக்கின்றமையால் காரியங்களை அவர் புத்திபூர்வமாகக் கையாளுவர் என்றுதான் பலரும் எதிர்பார்த்தனர்.**

**ஆனால், கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத் துடியாய்த் துடித்துக் காரியமாற்றிய புத்திஜீவிகள் பலரும் இன்று அவரது வியத்மக அமைப்புப் பக்கமே தலை வைத்துப்படுப்பதில்லை.**

**அவர்களில் பலரும் தங்கள் நாட்டுக்குச் செய்த பேரழிவு வேலையின் பயனை – பலனை – நாடு இன்று பெரும் வினையாக அனுபவிக்க வேண்டி இருக்கின்றதே என்ற வேதனையில் மறுகிக் கொண்டிருக்கின்றார்கள்.**

**எதேச்சாதிகாரப் போக்கில் முனைப்பாக நிற்கும் ஒருவரிடம் தங்களின் புத்திபூர்வமான ஆலோசனைகள் எடுபடப் போவதேயில்லை என்ற பட்டறிவு சுடலை ஞானமாகவே இந்த புத்திஜீவிகளுக்கு கிட்டியிருக்கின்றது.**

**அசேதன உரத்துக்குத் தடை விதிக்கும் முடிவை ஜனாதிபதி கோட்டாவும் அவரது சகபாடிகளும் இராணுவத் தீர்மானம் போல எடுத்த போது. பல புத்திஜீவிகள் படித்துப் படித்துக் கூறினார்கள். நாட்டுக்குப் பேரழிவு தரும் முட்டாள்தனமான – தீர்க்க தரிசனமற்ற – நடவடிக்கை இது என்று பலரும் கூறிப் பார்த்தார்கள். இந்தப் பத்தியிலேயே சுமார் இருபது, இருபத்தியைந்து தடவைகள் – நேரத்துடனேயே – இவ்விடயத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தோம். இதன் விளைவு நாட்டுக்கு மீளமுடியாத அவலத்தைத் தரும் என்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் இப்பத்தியிலேயே சுட்டிக் காட்டியிருந்தோம்.**

**கடைசியில் என்ன நடந்தது? 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற கூற்றுக்கு அமைய நடந்து கொண்ட கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிப் பீடம் இப்போது அந்த எதேச்சாதிகார முடிவின் பலனை மிக மோசமாக அனுபவிக்கின்றது.**

**இதுதான் ஏனைய பொருளாதார விடயங்களிலும். பண நோட்டுக்களை அச்சடித்துத்தள்ளி, புழக்கத்துக்கு விட்டு, அதன் மூலம், இடி அமீன் பாணி ஆட்சி நடத்தும் இந்த அரசியல் தலைவரால் நாடு இன்னும் பல கஷ்டங்களை அனுபவிக்கப் போகின்றது என்பதுதான் துரதிர்ஷ்டம்.**

**இன்று முதல் தினசரி நாலரை மணி நேரம் மின்வெட்டு. நாடு தடுமாறிப் போகப் போகின்றது. சுற்றுலாத்துறைபடுத்து விடும். எல்லாத் துறைகளிலும் இதன் தாக்கம் நிச்சயம் மோசமாக இருக்கும். படுத்து விட்ட பொருளாதாரம் இனி மீள எழும்புவதற்கு இருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் இத்தகைய நடவடிக்கை மூடி அடைத்து விடும்.**

**ஒரு மோசமான ஆட்சியின் பாதிப்பான விளைவுகளை இந்த மின்வெட்டு நடவடிக்கை மூலம் மக்கள் உணரத் தொடங்குவர்.**

**இப்படி ஒரு நிலைமை ஏற்படும் என்று மின்சாரத் தொழிற்சங்கங்களும் சம்பந்தப்பட்ட ஏனையோரும் சில மாதங்களுக்கு முன்னரே – நேரத்துடனேயே – எச்சரித்திருந்தனர்.**

**யோகர் சுவாமிகளின் வார்த்தையில் கூறுவதானால் – 'இது எப்பவோ முடிந்த காரியம்'!**

**கோட்டாபயவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்த போதே இலங்கையின் நிலைமை இப்படித்தானாகும் என்பது தலைவிதியாக எழுதப்பட்டு விட்டது போலும்...!**

## அமைச்சர் என்ன சொன்னாலும் எரிபொருள்களின் விலை எகிறும்!

### ரில்வின் சில்வா இப்படிக் கூறுகிறார்



எரிசக்தி துறைசார் அமைச்சர் என்ன சொன்னாலும் நிச்சயமாக எரிபொருள்களின் விலைகள் உயர்வடையும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எரிசக்தி மற்றும் மின்சக்தி என்பன ஒன்றுடன் ஒன்று இணைந்த துறைகள் என்பதால் எரிபொருள்களின் விலைகளும், மின்சாரக் கட்டணங்களும் நிச்சயம் அதிகரிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள்களைக் கொள்வனவு செய்யும் நோக்கில் அரசாங்கம் அண்மையில் 50 கோடி டொலர் கடன் பெற்றுக் கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் விரயங்களைத் தவிர்க்கும் வகையில் செயற்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டுக்கு எரிபொருள் கப்பல் ஒன்று கொண்டு வரப்படுவது அமைச்சர்களுக்கு மஜிக்காக மாறியுள்ளது என ரில்வின் சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஊடகவியலாளர் சமுதித்தவிற்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள்

ஊடகவியலாளர் சமுதித்த சமர விக்ரமவிற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சமுதித்த வசிக்கும் பகுதிக்கு போதியளவு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

தமக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென சமுதித்த பிலியந்தல நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கைக்கு அமைய நீதிமன்றம் பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்திருந்தது.

எனினும் தமக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என சமுதித்த குற்றம் சுமத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து உரிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 14 ஆம் திகதி ஊடகவியலாளர் சமுதித்தவின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகன ரயர்களுக்கும் தட்டுப்பாடு வரலாம்!

*நாட்டில் வாகன ரயர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*அமெரிக்க டொலர் பற்றாக்குறை காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது.*

*எதிர்வரும் மே மாதமளவில் நாட்டில் அமெரிக்க டொலர்களுக்குத் தட்டுப்பாட்டு நிலை உருவாகும் என ரயர் இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.*

*சில வர்த்தகர்கள் ரயர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக போலியான தட்டுப்பாட்டை தற்போதே உருவாக்கி வருகின்றனர் என ஆசிய ரயர் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.*

*ஆண்டுதோறும் இலங்கைக்குள் சுமார் 31 லட்சம் ரயர்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*இதில் பதினெட்டரை லட்சம் ரயர்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.*

*எஞ்சிய சுமார் 41 வீதமான ரயர்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.*

*அமெரிக்க டொலர் தட்டுப்பாட்டால் வாகனங்களுக்கான ரயர்களை இறக்குமதி செய்து கொள்வதில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.*

## உண்டியல் மற்றும் ஹவாலா முறையில் இலங்கைக்குள் குவியும் டொலர்கள்!

உண்டியல் மற்றும் ஹவாலா முறையில் நாள் தோறும் சட்டவிரோதமாக ஒரு கோடி அமெரிக்க டொலர் வரையில் நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன எனக் கூறப்படுகிறது.

இத்தாலி, டுபாய், இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்டவற்றிலிருந்து இவ்வாறு பணம் இலங்கைக்கு கொண்டு வரப்படுகின்றன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

உண்டியல் மற்றும் ஹவாலா முறைமைகள் சட்டவிரோதமானவை என்ற காரணத்தால் இந்த விடயம் தொடர்பில் நிதி அமைச்சின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த சட்டவிரோத கொடுக்கல் வாங்கல் முறைமை ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்ற போதிலும் இந்த உண்டியல் மற்றும் ஹாவாலா முறைமையுடன் அரசியல்வாதிகள், வங்கி அதிகாரிகள், வர்த்தர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தொடர்புபட்டுள்ளனர் எனத் தகவல் கசிந்துள்ளது.

இதன் காரணமாகவே உண்டியல் மற்றும் ஹாவலா தொடர்பாகக் கிரமமான விசாரணை நடத்தப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வெகுவாக அதிகரித்துள்ள போதிலும் அது இற்றைப்படுத்தப்படாது 203 ரூபா என்ற தொகையில் தொடர்ந்தும் மத்திய வங்கி பேணி வருகின்றது.

எனினும் சந்தையில் டொலர் ஒன்று 243 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. உண்டியல் முறையில் இந்தக் கூடுதல் தொகை கிடைக்கப் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உண்டியல் முறை தொடர்பாக சுயாதீனமான அடிப்படையில் விசாரணை நடத்தப்படுவதில்லை என தெற்கு ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

# “என்னுடைய கனவிற்கும் இந்த துறைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை” இருந்தாலும் சாதித்து கொண்டேயிருக்கிறேன்...!

**~Rami Beauty Care| அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் ரமி சதீஷின் நேர்காணலிது.**



ரமி சதீஷ் - உரிமையாளர்
~Rami Beauty Care|
அழகுக்கலை நிறுவனம்

### ☞ உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் ரமி. பொறியியளாளராக வேண்டுமென்றே உயர் தரத்தில் கணிதத்துறையை தேர்வு செய்து கற்றேன். ஆனால் நான் கற்றதற்கும் பொறியியலாளராக வேண்டுமென்ற என கனவிற்கும் இப்போது நான் சாதித்துக்கொண்டிருக்கும் இத்துறைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எதிர்பாரததொரு விபத்தே என் வாழ்வில் அழகுக்கலைத்துறையை நான் தேர்ந் தெடுக்க காரணமாகியது. 2017 இல் ~Rami Beauty Care| அழகுக்கலை நிலையமொன்றை ஆரம்பித்து மணப்பெண் அலங்காரம், ஆடை வடிவ மைப்பலங்காரம், புகைப்படம் எடுத்தல் என்றவாறு பல சுயதொழில்களையும் விருத்திசெய்து வருகிறேன்.

### ☞ அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

பெண்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆண் இருக்கலாமென்றால் திருமணமான பெண்களின் வெற்றிக்குப்பின்னால் இருக்கும் ஆண் முதலில் அவளின் கணவராகத்தான் இருக்கவேண்டும். அப்படி எனக்கு ஊக்கமளித்த என் கணவர் சதிஷ் ஒரு சிறந்த புகைப்பட கலைஞர். வீட்டில் உனது திறமைகளை பூட்டி வைப்பதை விட அழகுக்கலை நிபுணராக வந்தால் இருவரும் சேர்ந்து தொழில் செய்ய முடியும் அதன் மூலம் நல்ல வருமானமும் ஈட்ட முடியும் என்ற அவரின் யோசனையும் உந்துதலுமே அழகுக்கலைத் துறையின் மேல் ஆர்வத்தை அதிகரித்தது. 2021 இல் **பிரியாசங்கர்** என்ற நிறுவனத்தில் அழகுக்கலை டிப்ளோமா கற்று பின்னர் வீட்டிலேயே மணப்பெண் அலங்காரம் செய்ய ஆரம்பித்தேன். மைதிலி, கண்ணன் ராஜமாணிக்கத்திடம் போதிய பயிற்சியை பெற்றதுடன் சுய முயற்சியில் 2017 இல் ~Rami Beauty Care| அழகுக்கலை நிலையமொன்றை ஆரம்பித்தேன்.

### ☞ இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

அழகுக் கலைத்துறையில் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு தனித்துவமிருக்கும். இதனைப் பொறுத்தே வாடிக்கையாளர்களின் வரவும் தங்கியிருக்கும். அழகுக்கலையை பொறுத்தவரை வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவது மிகவும் முக்கியம். அதுவே மிகப்பெரும் சவால் தான். அதிலும் குறிப்பாக நிறைய பெண்கள் சில நடிகைகளின் புகைப்படங்களைக் காட்டி அதுபோன்றே அழகுப்படுத்தக் கூறி என்னை இக்கட்டான என்னை நம்பி வரும் வாடிக்கையாளர்களை நான் திருப்தி செய்யவேண்டியது என் கடமையென்று புன்னகைத்துக்கொண்டே அதற்கான வேலையில் களமிறங்கிவிடுவேன். வாடிக்கையாளர்களை திருப்திபடுத்துவது தான் எனக்கான சவாலென நான் கருதுகிறேன்.



### ☞ அழகுக் கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக் கலைத்துறையில் தனித்துவத்தைப்பொறுத்தே வாய்ப்புகளும் கிடைக்கின்றன. அப்படி எனக்கு கிடைத்த வாய்ப்புகளில் ஒன்று தான் அருந்ததி தனியார் நிறுவனம் ஏற்பாடு செய்த மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சி விழாவில் நானும் பங்குபற்ற கிடைத்தமை. அங்கு இரு பெண்களை மணப்பெண்களாக அலங்கரித்தேன். ஒருவர் பாரம்பரியமாகவும் மற்றையவரை நவநாகரிக வடிவிலும் அழகுபடுத்தினேன். அங்கு வருகை தந்திருந்த அனைவரின் மத்தியில் நான் சிறப்பாக என் திறமையைவெளிகாட்டியதால் அருந்ததியின் அட்டைப்படத்தில் இடம் பிடிக்க வாய்ப்பு கிடைத்தது. இதனை என் சாதனையொன்றாகவே நான் கருதுகிறேன். இன்னும் பல நிகழ்வுகளில் கலந்துகொண்டு என் திறமையை காண்பிக்க ஆவலாக இருக்கிறேன்.

### ☞ சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

சில பெண்கள் சந்தரப்ப சூழ்நிலைகள் காரணமாக தன் வாழ்க்கையை தொலைத்து நிற்கின்றனர். ஒவ்வொரு பெண்களும் தனக்கு பிடித்த துறையை தேர்ந்தெடுக்க வேண்டும். பெண்கள் எதைப் பற்றியும் சிந்திக்காமல் தன்னுடைய துறையில் ஆர்வத்தோடு செயற்படவேண்டும். தன்னுடைய சொந்த காலில் நிற்கவேண்டும் என்ற எண்ணம் ஒரு பெண்ணுக்குள் இருக்குமாயின் ஒவ்வொரு பெண்களும் சாதிக்கும் தைரியமுடையவர்களாகின்றனர். பெரியவர்களிடம் கருத்துக்களை கேளுங்கள். ஆனால் இறுதி முடிவை நீங்கள் தான் எடுக்கவேண்டும். யாரையும் நம்பி பெண்களாகிய நாங்கள் வாழத்தேவையில்லை. சுயமாகத்தொழில் செய்தாலே போதும் தலைநிமிர்ந்து நிற்கலாம்.





காலைக்கதிர் Kalaikkathir

# ஜி.எஸ்.டி. வரி சட்டமூலம் அரசமைப்புக்கு முரண்!



## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

ஜி.எஸ்.டி. வரி தொடர்பான சட்டமூலத்தில் உள்ள சரத்துக்கள் அரசமைப்பிற்கு முரணானவை என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்ற அமர்வைத் தொடங்கிவைத்து உரையாற்றும் போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனைத் தெரிவித்தார்.

விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசமைப்புக்கு ஏற்புடையதல்ல எனத் தெரிவித்து உயர்நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் அதனை நிறைவேற்ற வேண்டுமாயின், நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆகவே, விசேட பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும் எனில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

# களுவாஞ்சிகுடி பொதுச் சந்தையில் உள்ள கடை ஒன்று எரிந்து நாசம்

களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைத் தொகுதியில் அமைந்துள்ள கடை ஒன்று திங்கட்கிழமை மாலை திடீரென தீப்பிடித்ததில் கடையிலிருந்து பல பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கடந்த திங்கட்கிழமை மாலை தனது வியாபார நடவடிக்கைகளை முடித்துவிட்டு கடையை வழக்கமாக பூட்டுவதுபோல் பூட்டிவிட்டு கடை உரிமையாளர் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பின்னர் மாலை 5.45 அளவில் குறித்த கடையினுள் இருந்து புகை வெளிவருவதை அயலி லிருந்தவர்கள் அவதானித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் உரிய கடை உரிமையாளருக்கும் அயலவர்கள் தெரிவித்ததற்கு இணங்க அவர் விரைந்து சென்று தனது கடையைத் திறந்தபோது கடையினுள் இருந்த அனைத்துப் பொருள்களும் தீப்பற்றிக் கொண்டிருந்ததை அவதானித்துள்ளார்.

எனினும் அங்கிருந்த அயலவர்களின் உதவியுடன் ஏனைய கடைகளுக்குத் தீ பரவாமல் இருக்க தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அணைத்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் குறித்த கடையிலிருந்து பிளாஸ்றிக் மற்றும் அலுமினியம் உள்ளிட்ட பல பெறுமதியான பொருள்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தத் தீ விபத்துச் சம்பவம் மின்னொழுக்காக இருக்கலாம் என அயலவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விரைந்து சென்று களுவாஞ்சிகுடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். களுவாஞ்சிகுடி பொதுச் சந்தைத் தொகுதி மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குச் சொந்தமானது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.


N Flash Super Detergent

வேலை வாய்ப்பு

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

தலைமை கணக்காளர் - 20 வருட அனுபவம்
கணனி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்
சாரதி – Light vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)

மேற்பார்வையாளர் - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர் - வாகன உதவியாளர் (பெண்)
ஆசிரியர் - தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள் தேவை
இரத்திரனியல் வெதுப்பக வேலையாள் - ஆண் (முன் அனுபவம் உடையோர்)
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் போன்ற நொறுக்குத்தீனிகள் தயாரிப்பவர்கள் (ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி – விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதிவாய்ந்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி – 186/11 NFlash super detergent
நெசவுசாலை வீதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607 A கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# தமது அரசியல் அதிகாரங்களை பலப்படுத்தமுயலும் அமைச்சர்கள்

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டு

நாட்டில் உள்ள பல அமைச்சர்கள் தமது அரசியல் அதிகாரத்தைப் பலப்படுத்த முயல்கின்றனர் என்பது அவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை அவதானிக்கும் போது தெளிவாகின்றது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில் -

இவ்வாறு முரண்பாட்டுக்களை கொண்டு செயற்படுவது மக்களுக்குச் சிறந்த சேவை செய்வதற்கான நகர்வுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல.

அதே சமயம் தனிநபர்களின் அரசியல் நலன்களுக்காக சில விடயங்களைச் செய்வதைத் தவிர்த்து நாட்டினதும் மக்களதும் நலனுக்காக உழைக்க வேண்டியது அவசியம். அதுமட்டுமன்றி நாட்டில் அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையே கூட முரண்பாடுகள் காணப்படுகின் றன.

எனவே முரண்பாடுகளைத் தவிர்த்து அனைவரும் ஒன்றிணைந்து தேசத்தின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கையிலிருந்து வெளிநாடு செல்பவர்களுக்கு போலி பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை தயாரிப்பு!

## பொலிஸார் எச்சரிக்கை

இலங்கையில் இருந்து வெளிநாடு செல்வதற்காக விமான நிலைய அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கும் பி.சி.ஆர். அறிக்கை போலியாக தயாரிக்கப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 3 பேரை கைது செய்வதற்கு குற்ற விசாரணைத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. பிரதான தரப்பு வைத்தியசாலைக்கு சமமான முறையில் இந்த போலி பி.சி.ஆர். அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நபர்களால் நீண்ட நாள்களாக இவ்வாறு போலி பி.சி.ஆர். அறிக்கைகள் வெளியிடப்பட்ட நிலையில் அதன் பிரதான தரப்பு வைத்தியசாலையின் கி.யு.ஆர். குறியீடு நுட்பமான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த போலி அறிக்கையைப் பெற்றுக் கொண்ட நபர்கள் பலர் அதனைப் பயன்படுத்தி வெளிநாடு சென்றுள்ளனர் எனக் குற்ற விசாரணை திணைக்கள தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மினுவங்கொடை மற்றும் தர்கா நகரங்களில் வாழும் நபர்கள் எனத் தெரியவந்துள்ளது. ஒரு பி.சி.ஆர். அறிக்கைக்காக 6 ஆயிரம் ரூபா பணம் அறிவிக்கப்படுவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சட்டங்கள் இருக்க முடியாது!

## ஒரே சட்டம் என்கின்றார் சரத் வீரசேகர



இலங்கை போன்ற ஒற்றையாட்சி நாட்டுக்கு அனைவருக்கும் ஒரே சட்டம் என்ற கட்டமைப்பு பொருந்தும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவருக்கும் வெள;வேறு சட்டங்கள் இருக்க முடியாது என்றும் சரத் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு இருப்பின் இனங்கள் மற்ற சமூகங்களிடையே கருத்து வேறுபாடு, விரக்தி மற்றும் பகைமையை உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டுவரும் நிலையில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

# படுகொலைகள், அட்டூழியங்களை புரிந்தகட்சியே டக்ளஸின் ஈ.பி.டி.பி!

# பிரபாகரன் சரணடைந்தார் என்றால் அவரைக் கொன்றவர்கள் நீங்களா?

## போர்க்குற்றத்துக்கு இதுவே சாட்சி என சிவாஜி காட்டம்




பிரபாகரனின் இறப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் அமைச்சர்களின் மாறுபட்ட கருத்துக்களில் பித்தலாட்டங்களும் பொய் பிரட்டுக்களுமே இருப்பதாகவே நாங்கள் உணருகின்றோமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறப்புத் தொடர்பில் அரசாங்கமும் அரசாங்கத்தில் உள்ளவர்களும் மாறுபட்ட கருத்துக்களையே கூறிவருகின்றார்கள். இதன்மூலம் போர்க்குற்றம் நடந்தது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள். இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பண்பு தெரியாத வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பற்றி வசைபாடியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியான ஈ.பி.டி.பி. பற்றி பொது மக்களுக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு படுகொலைகள், அட்டூழியங்கள் புரிந்தார் என்பது தெரியும். 2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரத்துக்காக ஊர்காவற்றுறை சென்றபோது ஈ.பி.டி.பி குண்டர்களால் சுட்டும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் மூவருக்கு இரட்டை மரண தண்டனை தீர்ப்பு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது.

பிரபாகரன் உயிருடன் சரணடைந்தார் என்று டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார். இது முதல் தடவை அல்ல. அப்படி என்றால் சரணடைந்தவர்களை நீங்கள் படுகொலை செய்தீர்களா என்பதற்கு பதில் கூறவேண்டும். இறுதி யுத்தத்தின் போது பிரபாகரனின் படம் என காண்பிக்கப்பட்ட படத்தில் நெற்றியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் இருந்தமை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பிரபாகரன் சரணடைந்திருந்தால் விசாரணை செய்திருப்பீர்கள். இலங்கை பூராகவும் பவனியாக கொண்டு சென்றிருப்பீர்கள். ஆனால் தற்போது குறித்த விடயங்கள் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரணாகவே கூறிவருகின்றீர்கள். சரணடைந்த பின்னர் கொல்லப்பட்டார் என்பது உங்கள் கருத்து. அவ்வாறு என்றால் இந்தப் போர்க்குற்றத்துக்கு யார் பொறுப்பு? இதற்கு யார் பதில் கூறுவது? அன்று இராணுவத் தளபதியாக இருந்த சரத்பொன்சேகா, பிரபாகரன் ஒரு வீரன் கடைசி வரை போராடியே மறைந்தார் என்பதை கூறுகின்றார்.

படைத் தளபதியின் கீழ் இருந்த ஓய்வுநிலை ஜெனரல் கமால் குணரட்ன என்பவர் கழுத்தில் இருந்த இலக்கம் ஒன்று என்ற இலக்கத்தகட்டையும் பிஸ்டலையும் கைப்பற்றினோம் எனக் கூறியுள்ளார். அவ்வாறு என்றால் பிஸ்ரலுடனா அவர் சரணடைந்தார். சரணடைவது என்றால் ஆயுதங்கள் இல்லாமல் தான் சரணடைவது. அவருடைய உடலை நாங்கள் புதைத்துவிட்டோமென ஒரு சிலர் கூறினார்கள். எங்கு புதைத்தோம், யார் புதைத்தார்கள் என்பது கூறப்படவில்லை. இன்னுமொரு பகுதியினர் எரித்துவிட்டு சாம்பலைக் கரைத்து விட்டோம் என்றார்கள். ஒரு போர் வீரனது உடலுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பது மரபு.

பிரபாகரனது இறப்புத் தொடர்பில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களையே அரசாங்கங்கள் கூறிவருகின்றன. பிரபாகரனின் உடலை அடையாளம் காண்பதற்காக கருணாவையும் தயா மாஸ்டரையும் கூட்டிச் சென்றீர்கள். ஒருவர் கொல்லப்பட்டால் குறித்த நபர் இந்தியாவாலும் தேடப்படுகின்றார் என்றால் ஏன் அவரின் மரண விசாரணை நடைபெறவில்லை.

ஹெலி மூலம் கருணாவை கூட்டிச் செல்ல முடி யும் என்றால் ஏன் சட்ட வைத்திய அதிகாரியை கூட்டிச் சென்று மரண சான்றிதழை வழங்கவில்லை. இந்தியாவிற்கு ஒரு நீதிமன்ற சான்றிதழை வழங்கியுள்ளீர்கள். இதனைவிட ஏன் டி.என்.ஏ. பரிசோதனை செய்யவில்லை. அன்றைய காலத்தில் பிரபாகரனின் தாயும் தந்தையாரும் பனாகொட இராணுவ முகாமில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

பிரபாகரன் எனக் காண்பிக்கப்பட்ட உடலை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒன்றில் அவர் தன்னைத் தானே மாய்த்திருக்கவேண்டும் அல்லது அவர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்பதை வரலாறு கூறும். அதனை விடுத்து சரணடைந்தார் சடலத்தை எடுத்தோம் புதைத்தோம் என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. பிரபாகரன் கொல்லப்பட்டிருந்தால் எதற்காக பிரபாகரனின் தாயாரிடன் பிரபாகரன் எங்கு இருக்கின்றார் என விசாரணை செய்தீர்கள் என்பதற்கான பதிலையும் கூறவேண்டும். அல்ஜசீரா தொலைக்காட்சிக்கும் தாயார் இதனைக் கூறியுள்ளார்.

பிரபாகரனின் இறப்புத் தொடர்பில் அரசாங்கத்தின் அமைச்சர்களின் மாறுபட்ட கருத்துக்களில் பித்தலாட்டங்களும் பொய் பிரட்டுக்களுமே இருப்பதாகவே நாங்கள் உணருகின்றோம். - என்றார்.

# அரச அலுவலர்கள் ஏப்ரல் மாதத்துக்குள் முழுமையான தடுப்பூசியைப் பெறவேண்டும்

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் அறிவுறுத்து



அனைத்து அரச அலுவலர்களும் ஏப்ரல் மாத இறுதிக்குள் முழுமையாக தடுப்பூசி பெற்றுக் கொள்ள வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முழுமையாக தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் பொது இடங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களும் பொது இடங்கள் என்பதால், அந்த இடங்களில் பணியாற்றும் அனைவரும் தடுப்பூசி பெற்றிருக்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண வலியுறுத்தியுள்ளார்.

ஏதேனுமொரு கடமைக்காக நிறுவனம் ஒன்றுக்குச் செல்லும் எவருக்கும், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்கள் முழுமையாகத் தடுப்பூசி பெற்றுள்ளார்களா என்று விசாரிக்க உரிமை உண்டு, அத்தகைய விசாரணையின் போது அந்த அதிகாரி முழுமையாகத் தடுப்பூசி போடவில்லை என்றால், அது தொடர்பாக பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்தால் சம்பந்தப்பட்ட அதிகாரி மீது தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசியைத் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு ஒருவருக்கு உரிமை இருந்தாலும், இன்னொருவரின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் உரிமை அவருக்கு இல்லை என்றும் அவர் மேலும் சுட் டிக்காட்டியுள்ளார்.

# இந்த வருடத்தில் இதுவரை மாத்திரம் 9 ஆயிரத்து 809 டெங்கு நோயாளர்கள்!

நாட்டில் இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 809 ஆக அதிகரித்துள்ளது.

40 முதல் 45 வீதமான கழிவுப்பொருள்கள் டெங்கு பரவுவதற்கு பங்களிப்பதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் அனோஜா வீரசிங்க தெரிவித்தார்.

கட்டுமானத் தளங்கள், பள்ளிகள் மற்றும் வணிக நிறுவனங்கள் டெங்கு பரவுவதற்கான அதிக ஆபத்துள்ள இடங்களாகக் கருதப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

# 13 வயது சிறுமி மீது துஷ்பிரயோகம் சந்தேகத்தில் பிக்கு ஒருவர் கைது!

வட்டவளை - ரொசெல்லப் பகுதியில் உள்ள விகாரை ஒன்றின் பிக்கு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள 13 வயதுடைய சிறுமி ஒருவரை விகாரையில் வைத்து துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் எனத் தெரிவித்து சந்தேகநபரான பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமியின் தந்தை வட்டவளை பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகத்தின் பேரில் பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார்.

விகாரையின் பிரதமகுருவால் தான் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக மாணவி தனது தந்தையிடம் கூறியமையையடுத்து தந்தை வட்டவளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சிறுமி டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் விசேட நீதி வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்படுத்தி வைத்திய அறிக்கை பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட பிக்குவை ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# உரக்கூட்டுத்தாபனப் பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் மதன்

*கொழும்பு வரையறுக்கப்பட்ட வர்த்தக உரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளரான ஏ.பி.மதன் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்பு செயலாளரான பு.காசிலிங்கம் தனது டுவிட்டரில் இதனை அறிவித்துள்ளார்.*

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ், சிங்கள ஊடகத்துறைகளுக்கு கமல் லியனராச்சியின் மறைவு பேரிழப்பு!

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்

மூத்த ஊடகவியலாளரும் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவருமான கமல் லியனராச்சியின் திடீர் மறைவு, சிங்கள, தமிழ் ஊடகத்துறைக்குப் பேரிழப்பாகுமென தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்துடன் நெருங்கிய உறவைப் பேணியவர் என்று கூறப்பட்டுள்ள அந்த அனுதாபச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கமல் லியனராச்சி, லக்பிம என்ற சிங்கள நாளிதழில் மூத்த செய்தியாளராகக் கடமையாற்றியிருந்தார் நீதி என்ற சிங்கள வார இதழ் மூலம் ஊடகத்துறைக்குள் கால்பதித்திருந்தார்.

சுமார் முப்பது ஆண்டுகால ஊடகத்துறை அனுபவமுடைய இவர், ஆங்கில மொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர். ஊடகத்துறையில் பல அனுபவங்களைப் பெற்று, 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் சிங்கள மொழிப் பிரிவுப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியிருந்தார்.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பதவி வகித்துப் பின்னர் முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகவும் பதவியுயர்வு பெற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மரணிக்கும்வரை பணியாற்றியிருந்தார்.

ஊடக வளவாளராகவும் கடமையாற்றிய கமல் லியனாராச்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களை நடத்தியதுடன், அது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களையும் பெற்று ஆவணப்படுத்தியிருந்தார்.

அவற்றை அரசியல் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதிலும் முன்நின்று செயற்பட்ட ஒருவர். அவற்றை அரசியல் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்வதிலும் ஆர்வத்துடன் செயற்பட்டார்.

செய்தியாளராகவும், ஊடக வளவாளராகவும் அவர் பணியாற்றிய காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தார். அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டார். ஊடகத்துறைக்கு அச்சுறுத்தலான காலத்திலும்கூட அவர், நாட்டைவிட்டு வெளிநாடு செல்லவில்லை.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஊடகத்துறை முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த கமல் லியனராச்சி, போர்க் காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தொடர்பான பல விழிப்புணர்வுக் கூட்டங்களையும் நடத்தியிருந்தார்.

அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பாகவும் விவரங்களைப் பெற்று, சம்பந்தப்பட்ட ஊடக அமைப்புகளுக்கு அறிவித்துக் குறைந்த பட்ச பாதுகாப்பை வழங்குவதில் முன்நின்று செயற்பட்டவர். குறிப்பாகப் போர்க் காலங்களில் சிங்கள - தமிழ் ஊடகத்துறையில் முரண்பாடுகள் எழுந்திருந்த பல சந்தர்ப்பங்களில், நிதானமாகச் செயற்படும் கமல் லியனாராச்சி, தேவைப்படும்போது வார்த்தைகளை அளந்து பேசுவார்.

பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டும்போது தர்க்கரீதியாகவும், கூர்மையாகவும் தன் கருத்துக்களை முன்வைத்து, நியாயங்களை வெளிப்படுத்துவார். இதனாலேயே தமிழ் ஊடகத்துறையினர் கமல் லியனாராச்சியோடு நெருங்கிப் பழகியிருந்தனர்.



சிங்கள, தமிழ் நாளிதழ்களுக்கு எதிராகப் பதிவு செய்யப்படும் முறைப்பாடுகளை நிதானமாக அணுகிப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பண்பும், குறித்த நாளிதழ் ஆசிரியர்களோடு உறவைப் பேணும் முறையும் அற்புதமானவை. ஒரு செய்தியாளனுக்கு இருக்க வேண்டிய பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை கமல் லியனராச்சியிடம் தாராளமாகவே இருந்தன.

போரின் பின்னரான சூழலில் சிங்கள, தமிழ் ஊடகத்துறைக்குள் இணக்கப்பாட்டையும் சரியான புரிதலையும் ஏற்படுத்தும் நோக்கில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல உரையாடல்களை நடத்திக் கொண்டிருந்த கமல் லியனராச்சியின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாதது. - என்றுள்ளது.

# வர்த்தகரிடம் தங்க ஆபரணம் திருடிய பெண் தப்பியோட்டம்

கடுவலையைச் சேர்ந்த கோடிஸ்வரரான வர்த்தகர் ஒருவரை இங்கிரிய பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்று மது திரவம் ஒன்றை வழங்கி மயக்கமுற செய்து, அவரிடம் இருந்த 39 பவுண் தங்க ஆபரணங்களைத் திருடிய பெண்ணைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தங்க ஆபரணங்களைத் திருடிய பெண், வர்த்தகருக்கு சொந்தமாக ஆடம்பர வாகனத்தை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளமையுடன் அந்த வாகனத்தை இடையில் கைவிட்டுச் சென்றுள்ளார்.

25 பவுண் எடை கொண்ட தங்கச் சங்கிலி, மாணிக்கக் கல் பதிக்கப்பட்ட 6 பவுண் மோதிரம், மாணிக்கக் கல் பதிக்கப்பட்ட 8 பவுண் எடை கொண்ட பதக்கம் என்பவற்றையே பெண் திருடிச் சென்றுள்ளார்.

ஆடம்பர வாகனத்தில் பெண்ணொருவருடன் வந்த ஆண் அறையில் மயங்கி கிடக்கிறார் என இங்கிரிய - பாதுக்க வீதியில் உள்ள ஹொட்டல் ஒன்றின் முகாமையாளர் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிக்குத்தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

உடனடியாக செயற்பட்ட பொலிஸார், ஹோட்டலுக்குச் சென்று அறையில் மயங்கி கிடந்த நபரை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். ஹோட்டல் முகாமையாளர் மற்றும் ஊழியர்களிடம் நடத்திய விசாரணைகளில் பெண் மாத்திரம் வாகனத்தில் சென்றமை தெரியவந்துள்ளது.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபருக்கு மயக்கம் தெளிந்த பின்னர், பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தியுள்ளனர். நண்பர் ஒருவர் வழங்கிய தொலைபேசி இலக்கத்துக்கு அமைய பெண், ஒரு நாளுக்கு முன்னர் அறிமுகமாகினார் எனவும் அந்த பெண் தான் அணிந்திருந்த 39 பவுண் தங்க ஆபரணங்களைத் திருடியுள்ளார் எனவும் தனது வாகனத்தைக் காணவில்லை எனவும் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

வாகனத்தில் 19 லட்சம் ரூபா பணம் இருந்தாக வர்த்தகர் பொலிஸாரிடம் கூறியுள்ளார். இதனையடுத்து ஹொட்டலில் உள்ள சி.சி.டி.வி. கமராக்களை ஆய்வு செய்த பொலிஸார், சம்பந்தப்பட்ட வர்த்தகரும், பெண்ணும் வரவேற்பறையில் அமர்ந்து பானம் ஒன்றை அருந்தியவாறு பேசிக் கொண்டுள்ளனர். சிறிது நேரத்தில் பெண், வர்த்தகரை அழைத்துக் கொண்டு அறைக்குள் செல்வது, கமராவில் பதிவாகியுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்கு இடையில், ஆடம்பர வாகனம் ஒன்று இங்கிரிய அரகாவில பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அங்கு சென்ற பொலிஸார், அந்த வாகனம் வர்த்தகருக்கு சொந்தமானது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த 19 லட்சம் ரூபா பெண்ணின் கைகளுக்கு சிக்கவில்லை எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவத்தை எதிர்நோக்கிய வர்த்தகர், பிரபலமான வர்த்தக சங்கத்தில் பதவி ஒன்றை வகிப்பவர் எனவும் வெளிநாடுகளில் இருந்து ஹார்ட்வெயார் பொருள்களை இறக்குமதி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக இங்கிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வங்கிகள் கடன் வழங்கவேண்டாம்!

## மத்தியவங்கி அறிவிப்பு



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குவங்கிகள்கடன்வழங்குவதைத் தடைசெய்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் விசேட சுற்று நிருபமொன்றை வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு தொடர்ந்து கடன்களை வழங்குவதால், அரசாங்கத்தின் வங்கி அமைப்பு எதிர்காலத்தில் இயங்க முடியாது மற்றும் வீழ்ச்சியடையக்கூடும் என்று மத்தியவங்கியின் ஆளுநர் அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

இதன் காரணமாக அரசின் வங்கி அமைப்பு சீர்குலைந்தால் அதற்கு தாம் பொறுப்பேற்கப் போவதில்லை என கப்ரால் மேலும் அரசுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கிடையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு தொடர்ந்து கடன் வழங்குமாறு பல்வேறு தரப்பினர் வங்கிகளை வற்புறுத்தி வருகின்றனர் என அரச வங்கிகளின் அதிகாரிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய கடன்கள் உச்ச வரம்பை எட்டியுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

இதனால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் எரிபொருளுக்கு விதிக்கப்பட்டுள்ளவரியைநீக்குவதேபிரச்சினைக்கு ஒரேதீர்வுஎனவும்அவர்தெரிவித்துள்ளார்.

எரிபொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அந்தக் கோரிக்கைக்கு அதிகாரிகள் இதுவரை பதிலளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பாதிப்பு; மீனவர்களுக்கு 2 ஆம் கட்ட இழப்பீடு

கடந்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதி தீ பரவலுக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இரண்டாம் கட்ட நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக 17.5 லட்சம் அமெரிக்க டொலர் நிதியை எதிர்வரும் வாரம் தொடக்கம் நட்டஈடாக வழங்கப்படவுள்ளதாக அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழிற்துறை முகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மீன்பிடி நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்ட வலயங்களாக பெயரிடப்பட்ட கம்பஹா, கொழும்பு, களுத்துறை மாவட்டங்களைச் சேர்ந்த 15 ஆயிரம் கடற்றொழிலாளர்களுக்கு முதலாம் கட்டத்தின் கீழ், கப்பல் பாதுகாப்பு நிறுவனத்தால் 42 கோடி ரூபா நட்ட ஈடாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 289**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**729.அவர்கள் இந்தத் கோரிக்கைகளை செவிமடுத்து, ஒற்றுமையான அழுத்தங்கள் தருவார்களா?**

மேலோட்டமாகப் பார்த்தால், இந்தல் கட்சிகளில் பெரும்பாலோனோர், சிறுபான்மையினரை ஒட்டி கரிசனை கொண்டிருப்பவர்களாயினும், தமிழ்த் தேசியம், தமிழ் மக்களின் உரிமைகள் என்ற பயணத்தில் இணைந்திருந்து, பின் விலகியோ அல்லது அந்நியப்பட்டடோ, அதனை விடுதலை புலிகளின் பார்வையிலிருந்து வேறு பல்வேறு கோணங்களில் பார்த்தவர்கள். தமிழ் மக்களது இழிநிலையிலிருந்து, இணக்கமான அணுகுமுறைகளால் அவர்களது வாழ்வாதா



ரவூப் ஹக்கீம்

ரங்கள் முக்கியப்படுத்தப்பட்டு, முன்னேறப்பட வேண்டும் எனக் கருதுபவர்கள்.

இவர்களில் பலர், தனித்தனியே 13 ஆம் திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவது சிறந்தது என்று குரல் கொடுத்திருந்தாலும் ஒற்றுமையாகக் குரல் கொடுத்தவர்கள் அல்லர். ஆதலால் இவர்களும், இது இடைக்காலத் தீர்வோ, நிரந்தரத் தீர்வோ என்ற வரைபாடுகள் பற்றிப் பேசாமல் அது அமுல்படுத்தப்பட வேண்டுமெனக் கோருவது ஆட்சி பீடங்களுக்கு அழுத்தத்தைத் தரும்.

இந்தக் கட்சிகள் மட்டுமல்ல, கூட்டமைப்பினர் கூட, போர் முடிந்த இந்த 12 வருடங்களில், உறுதியளிக்கப்பட்ட 13++ யையோ, ஆகக் குறைந்தது இந்த 13ஆவது திருத்தத்தையோ அமுலாக்கும்படி, இந்திய அரசை கேட்டதில்லை.

புலம்பெயரின் இந்தச் சமர்ப்பணத்தில் –

“இதற்குள் எதுவுமே இல்லை என்ற கண்மூடித்தனமான நிராகரிப்பு வாதத்தைப் புறந்தள்ளி, கிடைத்துள்ள சட்டபூர்வமான தீர்வை கையேற்று, இலங்கையின் அரசியல் யாப்பினுள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மாகாண சபையைப் பயன்படுத்தி, ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாடுகளினூடாக முன்நோக்கி நகர்த்துகின்ற சாதகமான கண்ணோட்டத்துடன் நோக்கும்படி இலங்கை அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் கோருகின்ற நேர்மையான குரல்களும் அழுத்தங்களுமே இன்றைய தேவையாக உள்ளது...

அத்துடன் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் சட்டவலுவுள்ள ஆட்சியமைப்புக்கள் ஸ்தாபிக்கப்பட்டு நிலைநாட்டப்பட்ட அதிகார பகிர்வின் அடிப்படையிலான சட்டபூர்வ கட்டமைப்பாக அமைந்த ஒரேயொரு நடைமுறையிலுள்ள அரசியல் தீர்வும் இம் மாகாண சபை தீர்வு மட்டுமேயாகும்...

“இதைவிட வேறு அரசியல் தீர்வுகளை தற்போது பேசுவதும், அத்தகைய ஒன்றுக்காக இப்போது கையிலிருக்கின்ற மாகாண சபை தீர்வினை கைவிடச் சொல்லி குரல் எழுப்புவதும், அதற்குள் ஒன்றுமேயில்லை என்று நம்பிக்கையீனத்தை மட்டுமே ஊட்டுவதும், அவ்வதிகாரத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு வகை செய்வதும், அதனை இல்லாமல் செய்ய உதவுவதும், பாதிக்கப்பட்ட மக்களை அரசியல் ரீதியாக தொடர்ந்தும் அநாதரவான நிலைக்குத் தள்ளி விடுவதாகவவே முடியும் என்பது நிதர்சனமாகும்.” – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ராஜீவ் காந்திக்கு அரசியல் தைரியமோ, தார்மீகத் தைரியமோ இல்லை என கூறியதின் அடிப்படை, அவர் தனிநாட்டையோ, சமஷ்டியையோ ஊக்குவித்து, தமிழ் மக்களின் கைகளில் அதிகாரத்தைத் தந்து, சிங்களப் பெரும்பான்மையில் தங்கியிருக்கத் தேவையில்லாத நிலையை உருவாக்கவில்லை என்பதுதான்.

அது எவ்வளவில் உண்மையானதோ அதேபோல, இந்தியப் பிடியில் இருந்து விடுபட்டு, தங்களது ஏகோபித்த அதிகாரம் நிலைப்படுத்தப்பட வேண்டும் என்ற திட்டங்களோடு இந்தியப் படைகளை வெளியேற்றிய பின், மாகாண சபைகளை இடைக்காலத் தீர்வாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு அரசியல் தைரியமும் தார்மீக தைரியமும் இருக்கு



டக்ளஸ் தேவானந்தா

மென்று எண்ணி, பேரினவாதத்தின் வலையில் அவர்கள் விழுந்தார்கள் என்பதும் உண்மை.

ஆனால், வேறு வழிகளே கையிருப்பில் இல்லாமல், இந்த மாகாண சபை முறைகளோ இல்லாமல் ஆக்கப்படும் உன்மத்தங்கள் தெளிவாக தெரியும் போது, அந்த மாகாணசபைகள் முறைமைக்காக, தமிழ் மக்களின் எல்லாத் தரப்புக்களும், அழுத்தம் கொடுப்பது வரவேற்கபட வேண்டியதே. அதில் அவர் கேட்கவோ, நாம் கேட்கவோ என்றில்லாமல், எது செய்யப்படவேண்டியது என்று, ஒரு பொது நோக்கில் அடையக்கூடிய முயற்சிகளுக்கு ஊக்கம் வேண்டும்.

இவர்களில் யார், இதனை பொறுப்பெடுத்து, எல்லாரையும் நாட்டில் இணைத்து, மாகாண சபை முறைகள் நீக்கப்படக் கூடாது. என முன்னெடுப்பார்கள் என்பது முன்வரிசை கேள்வியாகிறது.

மாகாண சபை முறைமை, இருந்தால் கோட்டாவின் ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்பதை நடைமுறைப்படுத்த வழியில்லை என்பது ராஜபக்ஷக்களுக்கு நன்றாக தெரியும். அதனால் அவர்கள் அரசமைப்பு சட்டத்தை மாற்றி, மாகாண சபை முறைமையை இல்லாமல் ஒழிக்கவே கங்கணம் கட்டுவார்கள். அதில் அவர்களோடு, இணக்கமாயிருக்கும் தரப்புக்கள் எந்த நிலையை எடுப்பார்கள் என்பதில் மக்கள் தெளிவு கொள்ளலாம்.

**730.இவர்களில் எந்தக் கட்சிகள் இதனை ஏற்று முன்னெடுப்பார்கள்?**

இதனை முன்னெடுக்கும் புலம்பெயலாளர்கள் கனடா, சுவிட்ஸர்லாந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்து இயங்கி ஆதரவு தேடி, வரும் மேற்கண்ட ஆதரவில், குழுமம் ஒன்றை அமைத்து இந்தக் கட்சிகளுடன் ஈடுபட்டு அழுத்தத்தை தருவார்கள் என்று அறியப்படுகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தான் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் போன்ற பரப்புகளோடு சேர்ந்து இந்தியாவுக்கு ஆவணத்தைச் சமர்ப்பிக்க இணங்கிய வேளைகளில், இலங்கைத் தமிழரசு கட்சி, உள்ளே வந்து, தங்களின் உண்மையான நோக்கங்களைப் புரிந்து கொள்ளாது, இராஜதந்திர அணுகுமுறைகளையும் விளங்காது, அந்த முயற்சியின் நோக்கத்தையே மாற்றி, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய விடயங்களையும் அவர்களுக்கே உரித்தானவையாகவும் மாற்றியதால், தானும் ரவூப் ஹக்கீமும் வெளியேறினர் என ஆதங்கப்படுகிறார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, மாகாண சபைகளே நிலைநிறுத்த, ஈழத்தமிழர்களும், மலையகத் தமிழர்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து செய்யும் சமர்ப்பணமாகவே இது முதலில் நோக்கப்பட்டது என்கிறார். ஆனால் இது தற்சமயம் வட கிழக்கு ஈழத்தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை முன்னெடுத்ததாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த முயற்சிக்கு எல்லோரதும் ஆதரவு உண்டு என்பதும், அவரது அறிவிப்புகள்.

டக்ளஸ் தேவானந்தா அன்று தொட்டு “மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி” என்ற சுலோகத்தில் அரசியல் செய்பவர். அதன் அத்திபாரமே 13ஆம் திருத்தமும், மாகாண சபை முறைகளும்தான். அவர் எல்லா அரசுகளிலும் அங்கம் வகித்தாலும், 13ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக் கோரி தன் குரலையோ முஷ்டியையோ உயர்தியவர் அல்லர். ஆயின் சந்திரிகா காலத்தில் அந்தத் தீர்வுகள் ஏற்படுத்தவும் ஏற்றுக் கொள்ள வைக்கவும் பலமாக பாடுபட்டவர்.



கோட்டாபய ராஜபக்ஷ

அதேசமயம் மந்திரி சபையின் கூட்டுப் பொறுப்பில், அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க வேண்டியவர். அப்படி ஒத்துப்போக முடியாவிட்டால், அமைச்சு பதவியைத் தூக்கி எறிந்து வெளியேற வேண்டியவர்.

“ஒரே நாடு; ஒரே சட்டம்” என்பதை நடைமுறைப்படுத்த ராஜபக்ஷக்களுக்கு 13ஆம் திருத்தத்தை விலக்கிய புதிய அரசமைப்புச் சட்டம் அத்தியாவசியமாகின்றது. அப்படியானால், டக்ளஸ் சுயாட்சிக்காக தமிழ் மக்களோடு நிற்பாரா அல்லது புதிய அரசமைப்பு தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களுக்கும், சுபீட்சத்திற்கும் அத்திபாரங்களை ஒரு நாடாக, ஏற்படுத்தியுள்ளது என்று மேலும் இணைந்து கொண்டே செயற்படுபவரா என்பது இந்தப் புலம்பெயர் குழுமங்களின் ஆளுமைகளில் தங்கியுள்ளது.

எப்படி பார்த்தாலும், இப்படியாக ஒருமித்த நிலையிலிருந்து வரும் சமர்ப்பணங்கள், வட கிழக்கு தமிழ் மக்களின் உரிமைகளை மையப்படுத்தாது கையளிக்கப்பட்டாலும், அதிகாரங்கள் பரவலாக்க பட வேண்டும் என்பதை வலியுறுத்தும்; அனுசரணையாக இருக்கும். அதற்கும் மேல், எல்லாத் தமிழரும் ஒன்றாகவோ வெவ்வேறு குழுமக்களாகவோ திருத்தத்தை அமுல்படுத்தக் கோரி யும், உன்மத்தமாக அது நீக்கப்பட்டு, புதிய அரசமைப்பு ஏற்படுத்தப்படுமாயின், அது இந்தியாவுடனான சர்வதேச ஒப்பந்தத்தை மீறுவதாகும். அங்கு தமிழ் மக்களுக்கான இந்தியாவின் அரசியல் தைரியமும்,



மனோ கணேசன்

தார்மீகத் தைரியமும் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றன.

(வளரும்)

## பிச்சைக்கார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எரிபொருள் ஏற்றிய கப்பலில் உள்ள எரிபொருளை இறக்குவதற்கு 36 மில்லியன் டொலர் இல்லை என்பதால், வெஸ்ட் கோஸ்ட் மின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் 300 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போகும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

36 மில்லியன் டொலர் இல்லாத காரணத்தால், நாட்டு மக்களின் போக்குவரத்தை மாத்திரமல்லாது மின்சாரத்தையும் அரசு இல்லாமல் ஆக்கியுள்ளது.

மின்சார நெருக்கடி உட்பட பொருளாதார நெருக்கடி காரணமாக அரசு பாறையைப் பறித்த பூனையின் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது - என்றார்.

---

## வயோதிபப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இடம்பெற்றுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது 72) எனும் பெண்ணே அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில், அப்பெண் தனிமையில் இருந்த வேளை, வீட்டு வேலைக்கு வந்த இளைஞரே பெண்ணைப் கோடரியால் அடித்துக் கொலை செய்த பின்னர், அப்பெண் அணிந்திருந்த தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

## கனகராயன்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இருவரையும் மோதியுள்ளது.

விபத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த சிவசுப்பிரமணியம் சிந்துஜா (வயது 33) என்ற பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

அவரது தந்தை படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

---

## இரு வருடங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு பாரியளவிலான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. நாம் கடந்த ஐந்து வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தைச் சிறந்த முறையில் நிர்வகித்து வந்தோம்.

அதுமட்டுமன்றி நுகர்வோருக்கு மிகக் குறைந்த விலையில் பொருள்களைப் பெற்றுக்கொடுத்தோம். மருந்துகளின் விலையில் நிலையான தன்மையைப் பேணி மிகவும் குறைந்த விலைக்கு அவற்றைப் பெற்றுக்கொடுத்தோம்.

எரிபொருள் விலையைக் குறைத்து அதற்கான பலனை மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தோம். நாட்டைப் பொருளாதார ரீதியில் மிகச் சிறந்த முறையில் முன்னோக்கிக்கொண்டுசென்றோம்.- என்றார்.

---

## ஜனாதிபதி செயலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இந்த எதிர்ப்பை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியுடன் மலையகக் கட்சிகளின் ஒத்துழைப்பும் நாடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை முற்பகல் 11 மணியில் இருந்து ஒரு மணிநேரம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

## நாட்டில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய நாளாந்தம் சுமார் 4 ஆயிரம் மெட்ரிக் டன் எரிபொருள் தேவைப்படுகின்றது. நேற்று இரண்டாயிரம் மெட்ரிக் டன் எரிபொருளுக்குத்தட்டுப்பாடுஏற்பட்டுள்ளது.

இதனால் 550 மெகாவாட் மின் உற்பத்தி நிலையங்கள் நிறுத்தப்பட்டன.

இன்று எரிபொருள் தேவை 4 ஆயிரம் மெட்ரிக் டன் ஆகும். எனினும், ஆயிரம் மெட்ரிக் டன் மட்டுமே கையிருப்பில் உள்ளது.

இதன்படி இன்று 3 ஆயிரம் மெட்ரிக் டன் எரிபொருளுக்குப் பற்றாக்குறை ஏற்படும்.

அவ்வாறு பற்றாக்குறை ஏற்பட்டால் தேசிய மின் கட்டமைக்கு 750 மெகாவொட் மின்சாரம் இல்லாது போகும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் மேலும் கூறியுள்ளார்.

---

## 11 இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நீதிமன்றத்தில் நேற்றுக் காலை வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி இரவு நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மூன்று படகுகளையும் அதில் இருந்த 11மீனவர்களையும்கைதுசெய்தனர்.

தொடர்ந்து குறித்த மீனவர்கள் கடந்த 8 ஆம் திகதி கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரால் ஊர்காவற்துறைநீதிவான்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் மீனவர்களை 22ஆம் திகதி (நேற்று) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

---

## உயிர்த்த ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பட்டுள்ளன.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ளது.

88 தொகுதிகளைக் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுக் காலை ஜனாதிபதி சட்ட பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்த ரோஹணதீரவினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை 2021 ஏப்ரல் 8ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சட்ட காரணங்க ளுக்காகத் தொடர்புடைய சாட்சிகள் மற்றும் குறிப்புகள் இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் விசாரணையில் தெரியவந்த விடயங்கள் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், அது தொடர்பான கோப்புகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேலதிக பரிசீலனைக்காக நாடாளுமன்றத்தில் கையளிக்கப்பட்டது.

---

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முல்லைத்தீவு நகர பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இரவு நேரத்தில் 20 பவுண் நகை திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் நேற்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி, நெல்லியடி மற்றும் ஊர்காவற்துறை பகுதிகளைச் சேர்ந்த மூவர் குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 17 பவுண் நகையும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்கள் மேலும் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

## இனி இது...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)
என்ற ஆக்கம் தொடர்பில், என் நண்பன் சிவாஜிலிங்கத்தின் ஒலிப்பதிவையும் கேட்டுள்ளேன். கவலைக்கிடமாக, அதில் பல கருத்துத் தவறுகள் உள்ளன.

உதாரணமாக 4 வருடங்கள் பூர்த்தியாகாத கட்சிகளின் விண்ணப்பங்கள் தேர்தல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை என்கிறார். அது பிழை. அப்படி பல விண்ணப்பங்களை ஆணைக் குழு ஏற்று, பரிசீலித்து நிராகரித்துள்ளோம்.

ஒரு கட்சியில் ஒருவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வென்றால் அக் கட்சி அங்கீகரிக்கப்படவேண்டும் என்கிறார். இல்லை. ஓரிடத்திலும் அப்படிச் சட்டத்தில் கட்டாயப்படுத்தப்பட்டில்லை.

இந்த ஆண்டு ஒரு கட்சி விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டால் அது அடுத்த ஆண்டு விண்ணப்பிக்க முடியாது என்ற தீர்மானத்தை நாம் (தேர்தல் ஆணையம்) எடுத்திருந்தோம் என்கிறார். இதுவும் பிழை. இது நாடாளுமன்றத்தின் சட்டத்தில் உள்ளது. நாம் தீர்மானித்தது அல்ல.

மேற்கூறியவாறு ஒரு கட்சி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்று, அங்கீகரிப்புத் தகுதி பெற்றது என்று கருதினாலும்கூட, ஒருவருடத்துக்குவிண்ணப்பிக்க முடியாது. மேலும், நீதிமன்றத்தில் ஒரு வழக்கை மீளப் பெறுவதை, கட்சியின் பதிவு விண்ணப்பத்தை மீளப் பெறுவதோடுஒப்பிடமுடியாது. கட்சிவிண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், அதை ஒரு வருடத்துக்கு பதிவுக்குக்கருதமுடியாது. ஏனெனில் அந்தச் சுதந்திரம் ஆணைக்குழுவுக்குத் தரப்பட்டில்லை. சட்டம் எமது (ஆணைக் குழுவின்) கைகளைக் கட்டி நிற்கிறது.

- இதுதான் பேராசிரியர் கூலின் விளக்கம்.

சட்டத்தின் இந்தக் கட்டை மர்மமாக அவிழ்த்தவர் யார்? அதில் இடம்பெற்ற மோசடி என்ன? - என்று நான் கிளப்பிய சர்ச்சைக்கு சரியான பதில் இன்னும் வெளிவரவில்லை, அந்த மர்மம் நீடிக்கின்றது என்பதுதான் நிலைமை.

- மின்னல் -

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975021222382
Email: ejcitsltnet.lk.



காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாதொழிக்கும் போராட்டத்துக்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்!

## தமிழரசு வாலிபர் முன்னணி தலைவர் கி.சேயோன் அழைப்பு






மக்களின் ஜனநாயகத்தை வலுவாகப் பாதிப்பதும், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களை அடக்குவதுமான இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கையெழுத்துப் போராட்டத்திற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின்வாலிபர்முன்னணிதலைவர்கி.சேயோன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கெதிரான கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் - இலங்கையில் தமிழ் மக்களை மட்டுமல்லாது அனைத்து மக்களையும் அரசாங்கத்தின் கட்டுக்குள் வைத்திருப்பதற்காகப் பெரும்பான்மை அரசாங்கங்களால்கையாளப்படுகின்றசட்டமாகஇந்தப்பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் விளங்குகின்றது.

இந்தச் சட்டம் இந்த நாட்டில் அதிகமாகத் தமிழர்கள் மீதே கட்டவிழ்த்துவிடப்பட்டது. 1979 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தால் எத்தனையோ தமிழ் இளைஞர், யுவதிகள் காரணங்கள் எதுவுமின்றி கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதில் பலர் இன்னும் சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களின் இளமை, வாழ்க்கை என அனைத்தையும் இழந்து நிற்கின்றார்கள். மக்களின் ஜனநாயகத்தை வலுவாகப் பாதிப்பதும், பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரங்களை அடக்குவதுமான இந்தச் சட்டம் முற்று முழுதாக இந்த நாட்டில் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் குறியாக இருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலேயே இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி கையெழுத்து சேகரிக்கும் செயற்திட்டத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் ஆரம்பித்துள்ளோம்.

இதன் முதற்கட்ட செயற்பாடாக கடந்த 03.02.2022 ஆம் திகதியன்று முல்லைத்தீவு ஊடக மையத்தில் வைத்து இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கான கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்தச் செயற்பாடு வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தற்போது இந்தக் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது.

எமது எதிர்கால பிள்ளைகளின் எதிர்காலம் கருதியும், அவர்கள் அச்சமில்லாத சூழலில் வாழ்வதை உறுதிப்படுத்தவும் அனைத்துமக்களும், பொது அமைப்பினரும், சிவில் செயற்பாட்டாளர்களும், அரசியலாளர்களும் இதில் கலந்துகொண்டு தங்களின் பங்களிப்பை வழங்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் சார்பில் கேட்டுக் கொள்வதோடு, இந்தச் செயற்பாடு உங்கள் பிரதேசங்களில் நடைபெறுகின்ற போது அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். - இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் குளறுபடி!

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு




கல்வி அமைச்சின் முறையான திட்டம் இல்லாமையால் கிழக்கு மாகாண ஆசிரியர்களின் இடமாற்றத்தில் குளறுபடி ஏற்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு வருகை தந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில் -

கிழக்கு மாகாணத்தின் ஆசிரியர்கள் இடமாற்றம் அரசியல்வாதிகளின் தலையீட்டால் தடைப்பட்டுள்ளது. ஆளுநரின் பணிப்புரையின் அடிப்படையில் தரவுகள் பெறப்பட்டு உரிய முறையில் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான எந்த ஒரு தகவலும் பெறப்படவில்லை.

இந்த விடயம் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருடனான கலந்துரையாடலில் தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் தரவுகள் பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவிருந்த ஆசிரியர்களின் இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தாமல் புதிய தரவுகளை பெறும் நோக்கில் இதுவரை தரவுகளும் பெறப்படாமல் காலம் தாழ்த்துவது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

இவ்வாறு வருடக்கணக்கில் பணிபுரியும் ஆசிரியர்களின் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை காரணமாகவே காலம் தாழ்த்தி செல்வதாகவும், கல்வியமைச்சின் சீரான ஒரு திட்டம் இல்லாமையால் காலம் தாழ்த்துவதை விட்டுவிட்டு உரிய ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை நடைமுறைப்படுத்துமாறு இதன்போது கோரிக்கைவிடுத்துள்ளார்.

# தீவகப் பெண்களின் நிலை வருத்தமளிக்கிறது உதவுவதற்கு தயார் என்கிறார் ஆளுநர்!



யாழ். தீவகப் பகுதிகளில் சில இடங்களில் பெண்கள் சமூகத்துக்கு விரோதமான நடத்தைகளுக்குத் தள்ளப்படுகின்றமை மிகவும் வருத்தமளிக்கும் நிலையில், அவ்வாறான பெண்களுக்கு உதவுவதற்குத் தயாராகஇருக்கிறேன்என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

தீவக பிரதேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை சாதாரணப் பகுதிகளோடு ஒப்பிடுகையில் கஷ்டமானது.

இருந்தாலும் சில தீவகப் பகுதிகளில் வாழும் பெண்கள் சமூகத்திற்கு ஒவ்வாத விடயங்களில் ஈடுபடுகின்றமை எனது கவனத்திற்கு வந்துள்ள நிலையில், இதனை எமது சமூகத்திற்கு அவமானமாகப் பார்க்கிறேன்.

யாழ். மாவட்ட செயலகம் ஊடாகத் தீவகப் பகுதிகள் தொடர்பான விவரங்களைக் கேட்டறிந்த நிலையில் அதிலும் பெண்களின் நிலை தொடர்பில் இவ்வாறான தகவல்கள் வெளிவருகின்றமை வருத்தமளிக்கிறது.

ஆகவே, சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களுக்கு ஏற்ற தொழில்த் துறையை ஏற்படுத்துவதற்கு வடக்கு மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் எனது பொறுப்பை நிறைவேற்றத் தயாராக இருக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இரண்டு விமானங்களை வழங்கும் அமெரிக்கா!

இரண்டு கடல்சார் கண்காணிப்பு விமானங்களை இலங்கை அரசாங்கத்துக்கு இலவசமாக வழங்க அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

இலங்கை விமானப்படை மூலம் இயக்கப்படும் வெளிநாட்டு இராணுவ விற்பனை ஒப்பந்தத்துக்கு அமையவே விமானங்கள் வழங்கப்படவுள்ளன எனவும் முதல் விமானம் 2022 இன் பிற்பகுதியில் அல்லது 2023 இன் முற்பகுதியில் விமானப்படைக்கு வழங்கப்படும் என விமானப்படை பேச்சாளர் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரனவின் வேண்டுகோளுக்கமைய, இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தில் கடல்சார் கண்காணிப்புத் திறனை வலுப்படுத்துவதற்காக 2 விமானங்களை விமானப் படைக்கு வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

டெக்ஸ்ட்ரான் ஏவியேஷன் தயாரித்த பீச்கிராப்ட் 360ஈஆர் இரட்டை - டர்போபிராப் விமானத்தை விமானப்படை கோரியிருந்ததாகத் தெரிவித்தார்.

இது அமெரிக்காவிலுள்ள பெடரல் ஏவியேஷன் அட்மினிஸ்ட்ரேஷன் மற்றும் ஐரோப்பிய விமானப் பாதுகாப்பு முகவரகம் ஆகியவற்றால் சான்றளிக்கப்பட்ட இலகுரக போக்குவரத்து விமானமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ரின் மீன் உற்பத்தியில் நாடு தன்னிறைவடைவு!

## இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர பெருமிதம்

ரின் மீன் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைந்துள்ளதாக மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், ஒரு வருடத்துக்குத் தேவையான 2 லட்சத்து 75 ஆயிரம் ரின் மீன் கலன்கள், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

2020 ஆம் ஆண்டு இலங்கையில் 90 ஆயிரம் ரின் மீன்கள் கலன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. 2019 ஆம் ஆண்டு 36 ஆயிரத்து 806 ரின் மீன் கலன்களை இறக்குமதி செய்ய 136 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு 26 ஆயிரத்து 44 ரின் மீன் கலன்களை இறக்குமதி செய்ய 107.6 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டு வரை 8 ஆயிரத்து 758 மெற்றி தொன் ரின் மீன் கலன்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 480 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.02.2022இல் வெளியிடப்பெற்றது.